ஏன்? ... ஏன் கூடாது?

R. *ஸ்டான்லி, ஜூலை 1996*

மார்ச் 7 அன்று ஜபல்பூரில் வழக்கமாக ஜெபத்திற்காகக் காலையில் உலாவச் சென்றபோது மார்பில் உண்டான சிறு வலியை அவ்வளவு ஆபத்தானதென்று நான் நினைக்கவேயில்லை. ஏதோ களைப்பினால் ஏற்பட்டதொன்று என்றெண்ணி அதை என் மனைவியிடம் சொல்லவில்லை. ஆனால் அடுத்த வாரம் ஊழியத்திற்காய் டில்லி, டேராடூன் ஆகிய நகர்களுக்குப் பயணப்பட்டபோது வழியில் அடிக்கடி இவ்வலி ஏற்பட்டது. எனது சிறிய சூட்கேசைத் தூக்குவதே கடினமாகிவிட்டது. லில்லியனிடம் அதைச் சொன்னபோது அவள் உடனே டில்லியில் இருதய நோய் நிபுணர் ஒருவரிடம் அழைத்துச் சென்றாள். ECG எனும் சோதனையில் எதுவும் தெரியாவிட்டாலும், அடுத்துள்ள Tread Mill Testஇன் நடுவிலேயே வலிவந்துவிட்டதால் சோதனையை முடிக்க முடியவில்லை. டேராடூனிலுள்ள இறையியல் கல்லூரியின் மிஷனரிப்பணி வலியுறுத்தல் வாரக் கூட்டங்களில் செய்திகள் கொடுத்து முடித்தோம். அங்குள்ள மாணவரையும் ஆசிரியரையும் தேவன் பெரிதும் ஆசீர்வதித்தார்.

ஜபல்பூரிலுள்ள பணிக்களத்திற்குத் திரும்புவதற்குப் பதிலாக வேலூருக்கு வந்தோம். **CMC** மருத்துவ மனையில் இருதயநோய் நிபுணர் **Dr.** ஜேக்கப் ஜோஸ் அவர்கள் என்னைப் பரிசோதித்தார். **1970, 1971, 1972** ஆகிய ஆண்டுகளில் திருச்சியிலும் தஞ்சையிலும் அவர் பங்குபெற்ற ஆசீர்வாதக் கூட்டங்களை அவர் நினைவுபடுத்தினார். இத்தனை ஆண்டுகட்குப்பின் இத்தொடர்பு புதுப்பிக்கப்பட்டது பரவசமாயிருந்தது. அவர் **angiogram** எனும் சோதனை செய்யப்படவேண்டுமென்றார். ஆனால் பாடுகளின் வாரத்தில் ஜபல்பூரிலிருந்து **35** கி.மீ. தொலைவிலுள்ள கட்னியில் நான் பிரசங்கிக்கவேண்டிய கூட்டங்களைக் குறித்து அவரிடம் நான் சொன்னபோது அரைமனதாய் ஒப்புக்கொண்டு சில மாத்திரைகள் கொடுத்து அனுப்பிவைத்தார். அங்கு ஒவ்வொரு மாலையும் **90** நிமிடங்கள் சிரமமின்றிப் பிரசங்கிக்க முடிந்தது. ஆனால் மேடையிலிருந்து இறங்கியதும் வலி வந்துவிடும். புராட்டஸ்டன்டு மற்றும் கத்தோலிக்கச் சபையினர் இக்கூட்டங்களில் உயிர்மீட்சியடைந்தனர். சவால் பெற்றோர் ஈஸ்டர் அன்று கட்னியில் தெருத்தெருவாய் நற்செய்திப் பவனி சென்று இந்த வடமாநில நகரில் சரித்திரம் படைத்தனர்.

லில்லியனும் நானும் ஜபல்பூர் திரும்பியபோது. இனியுள்ள இருதய மருத்துவச் சோதனைகளையெல்லாம் ஜூன் அல்லது ஜூலைக்கு ஒத்திவைத்துவிட்டால் வேனிற்கால முக்கிய நிகழ்ச்சிகளைத் தடையின்றி நடத்திவிடலாமெனத் தீர்மானித்தோம். ஆனால் எனது நிலை மோசமடையத் துவங்கியது. ஓய்வின்போதுகூட அடிக்கடி வலி வர ஆரம்பித்தது. வேனிற்கால நெருக்கடியிலும் ஒரு சில நாட்களில் வேலூருக்குப் பயண முன்பதிவு செய்து புறப்பட்டோம். அவசர நிலை ஏதும் ஏற்பட்டால் உதவ மிஷனரி கேசவன் **(1965-2013)** எங்களோடு வந்தார். அடுத்த நாளே சோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அன்று ஏப்ரல் **17** என்றதால் சங்கீதம் **17**ஐக் காலையில் வாசித்தேன். மூன்றாம் வசனம் என் கவனத்தைக் கவர்ந்தது: "நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து ... ஒன்றும் காணாதிருக்கிறீர்!" எனவே எனது இருதயத்தில் அதிகமாக ஒரு பிரச்னையும் இருக்காது என்றெண்ணிப் புன்சிரிப்புடன் சோதனைக்கூடத்திற்குள்

சென்று வெளிவந்தேன். ஆனால்...! சோதனை முடிந்ததும் மருத்துவர் எனது மனைவியை அழைத்து, எனது இருதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் இரண்டில் **90** சதவீதத்திற்குமேல் அடைப்பு இருப்பதாகவும் அறுவை சிகிச்சை இன்றியமையாதது என்றும் சொல்லிவிட்டார். ஒவ்வொரு நாள் தாமதமும் பேராபத்து என்பதால் மருத்துவமனையிலிருந்து சில நாட்கள்கூட வீட்டிற்கு அழைத்துச் செல்வது ஞானமற்றது என்றார் அவர். என்னிடமோ மகள் இவாஞ்ச லினிடமோ சற்றும் கலந்தாலோசிக்காமலேயே லில்லியன் இப்பெரிய அறுவை சிகிச்சைக்கு ஒப்புக்கொண்டு வந்துவிட்டாள்! விவாதிக்கப் போதுமான நேரமில்லாததும், பலரிடமும் கேட்டு எங்களைக் குழப்பிக்கொள்ளாததும் நன்மையாகவே இருந்தது! **Dr.** ஜோஸ் அவர்களிடமே அறுவை சிகிச்சை நிபுணரைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பையும் விட்டுவிட்டோம். மறுநாள் **Dr.** ராய் கொருலா அவர்கள் என்னிடம் வந்து, “நான்தான் உங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்போகிறேன்; தேவ கிருபையால் யாவும் சரியாய் நடக்கும்” எனச் சுருக்கமாகக் கூறிச் சென்றார்.

இரத்தக்குழாய்களில் இவ்வளவு அடைப்பு இருந்தும். இத்தனைக் கூட்டங்களில் பிரசங் கித்துக்கொண்டிருந்தும், எனக்கு எப்படி மாரடைப்பு வராமற்போனது என்பது ஆச்சரியமே. தெரிந்த பிரச்னைகளுக்காகவும் தேவைகளுக்காவும் நாம் ஜெபிக்கலாம்; ஆனால் “இன்னதென்று அறியாமலிருக்கிற” காரியங்களைப்பற்றி? ஆம், இவ்விதச் சூழல்களில்தான் “ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்” (ரோ **8:26). ஆசீர்வாத** இளைஞர் இயக்கத்திலுள்ள ஊழியருக்குத் தடுப்பு ஜெபத் தோழர் **(Preventive Prayer Partners)** மூலம் கிட்டும் பேராசீர்வாதங்களை இங்கு பெரிதும் உணர்ந்தேன்.

உடலில் வலி, உபத்திரவம் என்றால் நான் எவ்வளவாய் நடுங்கிப்போவேன் என்று நன்கறிந்திருந்த நமது இயக்கத் தலைவர்கள் என்னைப் பார்த்துத் தைரியப்படுத்த விரைந்து வந்தனர். கீழ்ப்படிதல் வாழ்வு முகாம், வெள்ளி விழா கொண்டாட்டம், ஊழியர் கூடுகை ஆகியவற்றிற்காய் நான் அதுவரை ஆயத்தப்படுத்தியிருந்த செய்திக்குறிப்புகள் யாவற்றையும் அவர்களிடம் தந்துவிடுகிறேன் என்றேன். கண்ணீரை அடக்கிக்கொண்டு அவர்கள் வெளியே சென்று கலந்தாலோசித்தனர். அச்சூழலில் இக்கூட்டங்களை ஒத்திப்போடுவதே மேல் எனப் பல இடங்களிலிருந்து நண்பர்கள் தொலைபேசியில் சொல்லத் தொடங்கிவிட்டனர். தலைவர்கள் முடிவாக ஒருமனதாகக் கூட்டங்களை ஒத்திப்போடத் தீர்மானித்து, பதிவு செய்திருந்தவர் களுக்குக் கடிதங்கள் அனுப்பினர்.

நான் சிந்திக்கலானேன்! எனது கரத்தின் செயல்களை தேவன் வெகுவாய் வாய்க்கச் செய்துகொண்டிருந்தார். நான் வசனத்தைப் போதித்த இடங்களிலெல்லாம் மக்கள் ஆசீர்வாதம் பெற்றுச் செயலில் இறங்கியுள்ளனர். எனக்குத் தெரிந்த அளவில், ஜெபத்திலும் தியானத்திலும் தேவனோடு நேரம் செலவழிக்க முடியாத அளவு நான் அலுவல்களில் சிக்கிக்கொள்ளவில்லை. அப்படியிருக்கும்போது, தற்காலிகமாக என்றாலும், திடீரென்று என்னை இப்படி நிறுத்துவானேன்? அப்பொழுதுதான் மற்றவர்களுக்கு இத்தனை ஆண்டுகளும் நான் பிரசங்கித்து வந்திருந்த கீழ்க்கண்ட வார்த்தைகள் என் நினைவுக்கு வந்தன! "தேவனிடம் ஏன்? என்று கேளாதே! அவர் ஏன் கூடாது? என்று பதிலளித்துவிடுவார்!"

அறுவை சிகிச்சைக்கென்று ஏப்ரல் **23** குறிக்கப்பட்டது. அந்நாளுக்குரிய எனது வேதப் பகுதியாகிய சங்கீதம் **23**ஐ முந்திய நாளே தியானித்துவிட்டேன். "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (வச **4).** அறுவை சிகிச்சையன்று ஊக்கமான

ஜெபம் ஏறெடுக்கவேண்டி இந்தியாவிலும் உலகெங்கிலும் நமக்குத் தெரிந்த சபைகள், ஐக்கியங்கள், நமது தொடர்பு நபர்களுக்கு நமது தலைமையத்திலிருந்து எனது உடன்பிறவா சகோதரன் ஜெயராஜ் அவசரக் கடிதங்கள் அனுப்பினார். செய்தி கேட்டு அதிர்ச்சியுற்ற நண்பர்களிடமிருந்து தொலைபேசிச் செய்திகளும், வாழ்த்து அட்டைகளும், கடிதங்களும் வந்து குவிந்தன. (எனது தம்பியின் குமாரத்திகள் நீட்டாவும் புனிட்டாவும் வாழ்த்து அட்டைகளை அழகாக ஓர் ஆல்பத்தில் ஒட்டித் தந்துள்ளனர். வரும் ஆண்டுகளில் அதை அடிக்கடி பார்த்துக்கொள்வேன்). சகோதரர்கள் சாம் ஜெபத்துரை (1948-2018), S. பன்னீர் செல்வம் (1943-2013), மோகன் C. லாசரஸ் இன்னும் பலர் வெகுவாய் வாசிக்கப்படும் தங்கள் பத்திரிகைகளில் எனக்காக ஜெப வேண்டுகோள்கள் வெளியிட்டனர்.

நமது மிஷனரிகள் P. சாம்ராஜ், Y. பால் தினகரன் ஆகியோர் அறுவை சிகிச்சைக்கு முந்திய இரவு என்னைச் சந்தித்து விளங்கிக்கொள்ளமுடியாத தைரியத்தையும் அமரிக்கையையும் அடுத்த நாள் தேவன் எனக்கருளுவாரென உறுதியளித்தனர். எனது ஆருயிர்த் தம்பி கிறிஸ்டோபர் அபுதாபியிலிருந்து வந்துசேர்ந்தான். அவனும் அவன் குடும்பமும் முழுவதும் கூடவே இருந்து பேராதரவாயிருந்தனர். "இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்" என்ற வசனத்தின் நிரூபணமாய் அவன் விளங்கினான் (நீதி 17:17). வயதுசென்ற எனது மாமனார் மாமியார் (1917-2008, 1919-2005) தங்கள் பலவீனத்திலும் எப்படியோ வந்து ஆபத்தில் துணைநின்றார்கள். 1965 முதல் எனது வலது கையான சகோதரன் லயணல் ஜெபித்து, காலை 7 மணிக்கு என்னை அறுவை சிகிச்சைக்காக எடுத்துச் செல்லும் வழியில் உற்றார் உறவினரைக் கண்டு உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்கும்படி எனது கண்களை மூடிக்கொண்டேன். சிகிச்சை அறைக்குள் நுழையும்போது யாரோ என்னைத் தொட்டார்கள். கண் திறந்து பார்த்தபோது அது Dr. திருமதி ஜஸ்டின் பிரபாகரன் அவர்கள். "அண்ணன், தியேட்டர் ஏற்கனவே ஜெபத்தினால் நிறைந்திருக்கிறது; தைரியமாய்ப் போங்கள்" என்று சகோதரி சொல்லியனுப்பினார்கள். சிகிச்சை மேசையில் கிடத்தப்பட்டபோது மறுபடி கண்களைத் திறந்தேன். மேலே கண்ணாடிப் பார்வைக்கூடத்தைக் கண்டேன். 1971 முதல் 1975 வரை இதே மருத்துவமனையில் நான் பொறியியலராயிருந்தபோது இவ்வேலையை நான் மேற்பார்த்தேன்! மயக்கமருந்து கொடுத்து சுயநினைவு இழக்குமுன் நல்லதோர் கடந்தகால நினைவு!

அறுவை சிகிச்சை நடந்த வேளையில், காலை 7 முதல் மதியம் 1 வரை, தேவன் தம் மக்களை அசாதாரண ஜெப ஆவியினால் பாரப்படுத்தினாரெனப் பின்னர் அறிந்தேன். இதோ சில சாட்சிகள்: "என்னால் ஜெபிக்க முடியாமல் ஆறுமணி நேரம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டேயிருந்தேன்." "தொடர்ந்து ஏழு மணி நேரம் இப்படி நான் என்றுமே ஜெபித்ததில்லை." எனது நெஞ்சையே வெட்டிப் பிளந்ததுபோல் உணர்ந்தேன்." "அது உண்மையாகவே ஒரு போராட்டம் தான்; மதியம் 1 மணிக்குத்தான் விடுதலை அனுபவித்தோம்" "எங்களூரிலுள்ள ஏறத்தாழ எல்லாச் சபைகளும் அன்று உபவாச ஜெபம் ஒழுங்கு செய்தன. எங்களில் ஒருவர் வேலூருக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததென்று தெரிந்தபின்னரே நாங்கள் முழங்காலிலிருந்து எழுந்தோம்," அண்ணனுக்கு ஜெபித்ததுபோல் மக்கள் இந்தியாவுக்காக ஜெபித்திருந்தால் நமது நாடு என்றோ இரட்சிக்கப்பட்டிருக்கும்" என்று நமது தமிழக ஒங்கிணைப்பாளர் சகோதரன் சாந்தக்குமார் குறிப்பிட்டார்.

தியேட்டருக்குள் நுழையும்போது எவ்விதப் பதட்டமுமின்றி நான் எப்படித்தானிருந்தேனோவென்று இன்னும் எனக்குப் புரியவில்லை. இந்த அறுவை சிகிச்சையின் ஆபத்துகளை நான் நன்கறிந்தவன். சிகிச்சை முடிந்ததும் இருதயம் மறுபடித் துடிக்கத் துவங்காததால்

பிரேதங்களாகப் பலர் வெளியே கொண்டுவரப்பட்டதை நானே பார்த்திருக்கிறேன். எனது நண்பர், ஒரிசா போண்டோ ஆதிவாசிகளுக்கு மிஷனரியாகச் சென்ற **Dr. R.A.C.** பால் அவர்கள் வெறும் சடலமாக சில ஆண்டுகட்குமுன் வெளியே கொண்டுவரப்பட்டபோது இதே சிகிச்சையறையின் வாயிலில் நான் நின்றுகொண்டிருந்தேன். உண்மையைக் கூறின், நான் மரிக்க ஆயத்தமா யிருந்தேன். எனது வாழ்வின் உசித ஆண்டுகளை இறையரசுக்காகவே செலவிட்டு, வேதப் பிரியரும் ஆத்துமாதாயகருமான ஒரு தலைமுறையைத் தேவனது கிருபையால் எழுப்பி யுள்ளேன் என்ற திருப்தி எனக்கிருந்தது. எனக்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டால் லில்லியனையும் இவாஞ்சலினையும் கவனித்துக்கொள்ளுமாறு எனது தம்பிக்கும் எழுதியிருந்தேன். ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை நான் என்மீது சுமந்துகொண்டிருக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும். கர்த்தத்துவம் “அவர்” தோள் மீதல்லவா இருக்கிறது? (ஏசா **9:6**). அறுவை சிகிச்சைக்கு முந்திய இரண்டு மூன்று தினங்களில் ஜெபிக்கக்கூட முடியவில்லை. *“உம் சித்தம் தேவா ஆகட்டுமே”* என்று மட்டும் அவ்வப்போது சொல்லிக்கொண்டிருந்தேன்.

ஆப்பரேஷனை அடுத்துத் தீவிரக் கவனிப்பு அறையில் வைக்கப்பட்டிருந்தபோது முதல் இரு நாட்கள் நான் அவ்வளவு திடமாக இல்லை, பயந்துகொண்டும் நடுங்கிக்கொண்டும் இருந்தேன். எனது இரத்த அழுத்தமும், நாடித்துடிப்பும் மேலும் கீழுமாக மாறிக்கொண்டிருந்தன. என்னை உற்சாகப்படுத்திப் பயமில்லாமிருக்கச் செய்ய லில்லியனை மருத்துவர் உள்ளே அழைத்தார். மூன்றாம் நாள் மதியம் ஒரு சொப்பனம் கண்டேன். அதில் ஓர் உயர்ந்த புகைக் கூண்டு போன்றதில் மேலும் கீழும் என்னைக் கேலிச் சிரிப்புடன் பகடிபண்ணிக்கொண்டிருந்த பிசாசுகளின் நடுவில் நான் மாட்டிக்கொண்டிருந்தேன். தப்ப வழியில்லை. நெடுநேரப் போராட்டத்திற்குப்பின், “இப்பொழுது நான் என் வேதத்தை எடுக்கப்போகிறேன்” என்றேன். உடனே பிசாசுகள் பறந்தன; நான் விடுதலையோடு வெளிவந்தேன். அப்பொழுது விழித்துக்கொண்டேன். அவ்வினாடி முதல் நல்லதொரு விடுதலையை உணர்ந்தேன்.

வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனை தனிப்பட்ட கவனிப்புக்கும், குறிப்பாகத் தாதிமாரின் நல்ல உதவிக்கு, பெயர் பெற்றது. மருத்துவப்பணியானது வியாபாரமாகிவிட்ட இந்நாட்களில் இம்மருத்துவமனையோ அதின் நிறுவனர் மிஷனரி டாக்டர் ஐடா ஸ்கடர் அம்மையாரின் உயரிய தத்துவங்களின் அடிப்படையில் "கிறிஸ்துவின் சிந்தையோடு" சமுதாயத்திற்குச் சேவைபுரிவதில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மருத்துவர், தாதியர் துணை மருத்துவப் பணியாளர் ஆகியோரின் சேவை என்னைப் பெரிதும் அசைத்தது. நமது மிஷனரி பிளாரன்ஸ் ஜெய்சங்கரின் தங்கையும், ஒரு தாதியுமான ஹெலன் ஆலிஸைக் குறிப்பாய்ப் பாராட்டவேண்டும். எனக்கு உதவியதோடு, அந்நாட்களில் நொறுங்கிப்போயிருந்த இவாஞ்சலினுக்கு பேராதரவான சிநேகிதியாய் அவள் திகழ்ந்தாள். லில்லியனுடைய மனப்பக்குவமோ சற்று வித்தியாசமானது. இக்கட்டான அந்நாட் களில் அவளால் எவ்விதப் பதட்டமுமின்றி அமரிக்கையாயிருக்க முடிந்தது. அறுவை சிகிச்சை எனக்கு வேளையிலும் அவள் வெளியே இருக்கைகளில் கண்கலங்கிக்கொண்டிருந்த கிறிஸ்த வரல்லாத நோயாளிகளின் குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லி ஊழியம் செய்துகொண்டிருந் தாளாம்! இவ்வித அசாதாரணக் கிருபை பெற்றுள்ள எனது வாழ்க்கைத் துணைவிக்காகத் தேவனைத் துதிக்கிறேன்.

அறுவை சிகிச்சையை அடுத்த பத்து நாட்களும் சுமூகமாகக் கடந்தன. சளி, காய்ச்சல் போன்ற தொத்துநோய்களைத் தவிர்க்க பார்வையாளர்களை அதிகமாய் அனுமதிக்கவில்லை. (உங்கள் அன்பின் ஒத்துழைப்பிற்கு நன்றி). மே **4** அன்று வீட்டிற்கு அனுப்பப்பட்டேன். ஆனந்தக் கண்ணீரோடும் துதிப் பாடல்களோடும் தலைமையக ஊழியர் என்னை வீட்டிற்குள் வரவேற்றனர்.

நாங்கள் இப்பொழுதுதான் எங்கள் மணவாழ்வில் **25** ஆண்டுகளை முடித்திருந்ததால் இயக்கத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது லில்லியனுக்கும் எனக்கும் அன்பளிக்கவேண்டுமென்று இங்கிலாந்திலிருந்து இவாஞ்சலின் கொண்டுவந்திருந்த தங்க நிற விளக்குத்தண்டை அவள் என் கையில் கொடுத்தாள். எனக்குக் கிடைத்த புத்துயிருக்கு அடையாளமாய் நான் அதைக் கொளுத்தினேன். யாவரும் கர்த்தரைத் தொழுதுகொண்டோம்.

அடுத்து ஒரு சில தினங்களில் கொடூரமான குளிர்காய்ச்சல் வரவே மறுபடி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டேன். அது மலேரியா எனக் கண்டுபிடித்தார்கள். அறுவை சிகிச்சையின் போது எனக்கு இரத்தம் செலுத்தப்பட்டதில் இது வந்திருக்கலாமெனக் கருதப்பட்டது. எத்தனையோ மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்றும் மலேரியா நிறைந்துள்ள தொலைவிடக் கிராமங்களில் வசித்தும் வந்திருக்கிறேன். ஒருபோதும் எனக்கு மலேரியா வந்தது கிடையாது. ஒரு பெரிய ஆப்பரேஷனை அடுத்து, அதுவும் மிகவும் பிரபலமான மருத்துவமனையில், இக்கொடிய காய்ச்சலினால் நான் அவதிப்பட வேண்டுமோ? நமது மிஷனரி யாராவது மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தால் ஒரு சிறு ஜெபம் செய்துவிட்டு துதி விண்ணப்பச் சுற்றறிக்கையில் சேர்த்துவிடுவேன், அவ்வளவுதான். இப்பொழுது எனக்குத் தெரிகிறது, மலேரியா என்றால் என்னவென்று!

இரவெல்லாம் எனது படுக்கையருகே உட்கார்ந்து இருந்துவிட்டுக், காலையில் வீட்டிற்குச் சென்று எனது துணிகளைத் துவைத்து, உணவு சமைத்து எனக்கு மருத்துமனைக்கு அனுப்பி வைத்த மகள் இவாஞ்சலினைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் கலங்கின. இதுவும் போதாதென்று, "நீ ஓர் ஆலோசகி அல்லவா? பின்னை ஏன் அழுகிறாய்? உன் விசுவாசம் எங்கே?" என்ற சிலரது மனிதாபிமானமற்ற கேள்விகளையும் பாவம் பிள்ளை பொறுமையாய்க் கேட்க வேண்டியதிருந்தது. ஒரு குடும்பமாக எங்கள் மூவரையும் தேவன் இந்த இடுக்கண் மூலம் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாய்க் கொண்டு வந்துள்ளார். தேவன் எனக்கு இரு கண்கள் போன்று கொடுத்திருக்கும் லில்லியனுக்காகவும் இவாஞ்சலினுக்காகவும் அவரைத் துதிக்கிறேன்.

உடல் வலிமை குன்றியதோடு. இந்த ஆப்பரேஷனும் மலேரியாவும் எனது மனத்திடத்தையும் ஒன்றுமில்லாமல் வடித்துவிட்டன. என்னால் வேதத்தை வாசிக்கவோ, தேவ வாக்குகளை நினைவுகூரவோ, கர்த்தரில் மகிழவோ முடியாத ஒரு நிலை! ஒரு பிரசங்கியாராகிய எனது நிலை எனக்கே புரியாத புதிராயிருந்தது. அச்சூழலில் எனது தம்பியின் மாமியார் திருமதி சுகுணா ஜோசப் **(1929-2014)** அவர்கள் எனக்குக் கீழ்க்கண்டதைச் சொல்லிக் குறிப்பாய் உதவினார்கள்: "தேவன் தாம் தெரிந்துகொண்ட மனிதரின் வாழ்வில் இவ்வித வேளைகளை அனுமதிக்கத்தான் செய்கிறார். அப்பெரும் தீர்க்கன் எலியாவைப் பாருங்கள். அவன் தளர்ந்து பலமற்றுச் சும்மா தூங்கிக்கொண்டிருந்த வேளையில் கர்த்தர் தமது தூதன் மூலம் அவனுக்குச் சூடான ஆகாரம் கொடுத்துப் பலப்படுத்தினார். இவ்விதச் சமயங்களில் அக்கினி, இடிமுழக்கம் போன்ற வெளிப்படைக் காரியங்களை எதிர்பாராதேயுங்கள். அமர்ந்த மெல்லிய சத்தத்தில் தேவன் பேசுவார். எனவே ஸ்டான்லி, சும்மாயிருங்கள். நீங்கள் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. இன்னும் பண்ண வேண்டிய வெகுதூரப் பயணத்திற்காக உங்களுக்குத் தெரியாமலேயே கர்த்தர் உங்களை இப்பொழுது போஷித்துப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறார்!" நான் எப்படியோ அப்படியே இருந்து, வேறுவிதமாய்க் காட்டிக்கொள்ள முயற்சிக்காமல், நான் ஒரு பிரசங்கியார், வேத போதகன் என்றெல்லாம் என்னைப் பாதுகாத்துக்கொள்ள முகமூடிகளெல்லாம் போட வேண்டாமென அடிக்கடி இவாஞ்சலின் எனக்கு ஆலோசனை கூறி என்னை உற்சாகப்படுத்தினாள். எனக் கருமையான எனது முன்னாள் உடன் ஊழியர் சகோதரர்கள் **J.** ஈஸ்டர்தாஸ் **(1931-2007), V.**

எசேக்கியா பிரான்சிஸ் போன்றோரும், தேவ ஊழியரான சகோதரர்கள் **C.** சாமுவேல் **(1927-2018),** ஜோசப் பாலச்சந்திரன். **Dr.** புஷ்பராஜ் போன்றோரும் என்னைச் சந்தித்து, தொய்ந்திருந்த என் ஆவியைத் தேற்றினார்கள். எனது உடன் மிஷனரிகள் என்னை வந்து சந்தித்ததும் கடிதங்கள் அனுப்பியதும் எனக்கு டானிக் போலிருந்தன.

மக்கள் என்னை நேசிக்கிறார்கள், மதிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்; ஆனால் எந்த அளவு என்றறியேன். எனது வாழ்வின் இச்சம்பவம் என் கண்களைத் திறந்தது. எனது உடன் ஊழியர், நண்பர் பலர் எனக்கு இரத்ததானம் கொடுக்க முன்வந்தனர். அவர்களில் ஒருவரான தமிழரசன் தனது கண்கள் கலங்க எனது பாதங்களைப் பற்றிக்கொண்டு, "அண்ணா. நீங்கள் மட்டும் பிழைத்துக்கொள்ள முடியுமானால் உங்களுக்காக எதையும் செய்ய நான் ஆயத்தம்" என்றார். அவர் இரத்தம் கொடுத்துக்கொண்டிருக்கும்போது வேர்த்துக் குளிர்ந்து போய்விட்டார். ஒரு மணி நேரத்திற்குப் பின்னர்தான் சரியான நிலைக்கு வந்தார். தேவையானால் தங்கள் கண்களையும் பவுலுக்குப் பிடுங்கிக்கொடுக்க ஆயத்தமாயிருந்த கலாத்திய விசுவாசிகளை நினைத்துக்கொண்டேன் (கலா **4:15).** இன்னொரு மிஷனரி இப்படிச் சொன்னார்: "வேனிற்காலக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டதைப்பற்றிக் கவலையில்லை. தேவன் திரும்பவும் உங்களை எங்களுக்குத் தந்துவிட்டாரே அதுபோதும். அவர் நமது இயக்கம் மீதும் இந்தியா மீதும் கருணை காட்டியுள்ளார்."

இளமைப் பருவத்திலேயே (வயது **28)** முழுநேர ஊழியத்திற்கு வந்துவிட்டதால் எங்களது சொந்த சேமிப்பு மிகச் சொற்பமே. எனது மருத்துவச் செலவுகள் அனைத்தையும் பொறுப்பேற்க நண்பர்கள் முன்வந்தனர். எதையும் செய்ய இயக்கம் எப்பொழுதும் ஆயத்தமாயிருந்தது இன்னொரு பக்கம். நேர்முகமாகவோ மறைமுகமாகவோ யாரிடமும் கேட்காமல் குடும்பங்கள், ஐக்கியங்களிலிருந்து காணிக்கைகள் வந்து குவிந்தன. 'இத்தனை ஆண்டுகளும் நீங்கள் எங்கள் குடும்பத்திற்கு எவ்வளவு ஆசீர்வாதமாயிருந்தீர்களென்பதை என்னால் மறக்கவே முடியாது. என் மனைவியின் நகையை அடகு வைத்து இத்துடன் ரூ. **5000/-** அனுப்பியுள்ளேன். பெருமதிப்பிற்குரிய என் அண்ணனுக்கு இதற்கும் குறைவாய் என்னால் செய்ய முடியாது!" என்று ஒரு நண்பர் எழுதினார். இதுபோன்ற பல கடிதங்கள் என்னை உருக்கிவிட்டன. எங்கள் மிஷனரிகளில் இருவர் ஆளுக்கு ரூ. **1000/-** அனுப்பினர். ஆயிரம் ரூபாயும் சற்று கூடுதலுமே மாதச் சம்பளமாகப் பெறும் ஒரு மிஷனரிக்கு இது எவ்வளவு பெரிய தியாகமென்று நானறிவேன். பரம பிதா உங்கள் ஒவ்வொருவருக்கும் வெளியரங்கமாய்ப் பலனளிப்பாராக. மருத்துவச் செலவுகளெல்லாம் சந்திக்கப்பட்டாயிற்று; மீதிப் பணமும் இருக்கிறது!

போதுமான ஆண்டுகள் நாங்கள் பணிக்களங்களில் செலவழித்துவிட்டோம்; இனித் தமிழகத்திலேயே தங்கிவிடவேண்டுமென ஏறத்தாழ நமது தலைவர்கள், நண்பர்கள், உறவினர்கள் யாவருமே கூறுகின்றனர். எங்கள் வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை எழுதுவதிலும், தலைவர்களுக்கு ஆலோசனைகூறி அவர்களை வழிநடத்துவதிலும் செலவழிப்பதே சிறந்த தென அவர்கள் கருதுகின்றனர். நாங்கள் திறந்த மனதுடன் இருக்கிறோம்; ஆனால் இவ்விதப் பாச ஆலோசனைகள் தவிர்த்துப் பரத்திலிருந்து வரும் நடத்துதலுக்காகக் காத்துநிற்கிறோம். எனது **50**ஆவது ஆண்டில் வாழ்நாளைக் கூட்டிக்கொடுத்த ஆண்டவரிடம், "நான் இப்பொழுது என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஜெபத்தால் உதவுவீர்களா?

கடந்த **25** ஆண்டுகளும் ஆசீர்வாத இளைஞர் இயக்கமானது கிட்டத்தட்ட பெருங் கொந்தளிப்பு எதுவுமின்றி இயங்கிவந்திருக்கிறது. திட்டமிட்டபடி பெரிய நிகழ்ச்சி ஒன்று நடத்த முடியாமற்போனது இதுவே முதல் தடவையாயிருக்கலாம். கர்த்தர் நம்மிடம் இப்படிச் சொல்வது போலிருக்கிறது: "எதுவுமே தானாய் நடந்துவிடுமென எண்ணவேண்டாம். கவனமாயிருங்கள்.

நீங்கள் யுத்தக்களத்தில் இறங்கியிருக்கிறீர்கள். ஜெபத்தை அதிகரியுங்கள். உங்கள் அர்ப்பணிப்பை ஆழப்படுத்துங்கள். அன்பில் பெருகுங்கள். விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் வளருங்கள். இவைகளிலும் பெரிதானவைகளைக் காண்பீர்கள்!"

இக்கட்டுரை ஆசீர்வாதம் (Blessing) **பத்திரிகையின்**
1996 **ஜூலை மாத இதழில் வெளிவந்தது**.

R. Stanley, 13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943 (WhatsApp)
<stanleyonbible@hotmail.com> <evangelinestanley1@gmail.com>
www.StanleyOnBible.com　　***YouTube: Stanley On Bible***